# வரலாறு

## இராசரட்டை நாகரிகம்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

தேர்ச்சி :- 5.0 இலங்கை நாகரிகத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்குகள் தொடர்பான விளக்கம்

தேர்ச்சி மட்டம் 5.2 :- இராசரட்டை நாகரிகத்தின் அரசியல் பொருளாதாரம் சமூகம், கலாச்சாரம், தொழினுட்பம் என்பவற்றை விளங்கல்

இலங்கையின் முதல் தலைநகரான அநுராதபுரம் பண்டுகாபயனால் உருவாக்கப்பட்டது.

பண்டுகாபயன் அநுராதபுரத்தைத் தலைநகரமாக்குவதில் ஆற்றிய பணிகளை மதிப்பிடுக?

- சுமார் 1300 வருடகாலம் இலங்கையின் தலைநகராக விளங்கிய அநுராதபுர இராசதானியை உருவாக்கியவன் என்ற பெருமைக்குரியவன் பண்டுகாபயன் ஆவான். விஜயனுடன் வந்த ஆரியர்களில் ஒருவரான அநுராத என்பவனால் குடியேற்றமாக உருவாக்கப்பட்ட அநுராதபுரக் குடியிருப்பு பண்டுகாபயன் காலத்தில் அநுராதபுர நகரமாகத் தோற்றம் பெற்றது. இக் குடியிருப்பு வாஸ்து அடிப்படையில் சிறந்த இடத்தில் அமைந்திருப்பதால் இதனை நகரமாக்க பண்டுகாபயன் முடிவெடுத்ததாக மகாவம்சம் கூறியுள்ளது.

- இவ்வாறு அநுராதபுரத்தை தலைநகராக்கியதில் பண்டுகாபயன் மிகப்பெரும் பணியை ஆற்றியுள்ளான். விரிவாக நோக்கினால் பண்டுகாபயனின் வாழ்க்கை வரலாறு இதில் செல்வாக்குச் செலுத்துவதை உணரமுடிகின்றது. மகாவம்சக் கூற்றுப்படி பண்டுகாபயன் பண்டுவாசுதேவனின் மகள் வழிப்பேரனாவான். இவன் உன்மாதசித்திராவிற்கும், தீககாமினிக்கும் மகனாகப் பிறந்தான். இவனுக்கு கிரிகண்ட சிவன் முதலான பத்து மாமன்மார் இருந்தனர். சோதிடக் குறிப்பொன்றின்படி மாமன்மாரைக் கொலை செய்து ஆட்சி உரிமையைப் பெறுவான் எனக் கூறப்பட்டது. இதனால் இவனைக் கொலை செய்ய மாமன்மார் பல தடைவ முயற்சி செய்தனர். எனவே இவற்றிலிருந்து தப்பிக் பிழைப்பத்ததுடன் பிற்காலங்களில் மாமன்மாரை கொலை செய்து ஆட்சியைப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.



தொகுப்பு : திருமதி.த.சதீஸ்கரன் ஆசிரியர், (வரலாறு) (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- இவ்வாறு ஆட்சி உரிமையைப் பெற்றுக் கொண்ட பண்டுகாபயன் தனக்குரிய தலை நகராக அநுராதபுரத்தை உருவாக்கிக் கொண்டான். இவனால் உருவாக்கப்பட்ட அநுராதபுரத்தில் மக்களுக்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தான். வடக்கிலும் - கிழக்கிலும் சிதறி வாழ்ந்த ஆரிய குடிகளை அநுராதபுரத்தை அண்மிய பகுதிகளில் குடியேற்றத் தலைப்பட்டான். அத்துடன் இலங்கையின் முதற் குளமாக வர்ணிக்கப்படும் அபயவாவியை நிர்மாணித்து அநுராதபுர மக்களின் நீர் தேவையை நிறைவு செய்தான்.

- மேலும் அநுராதபுரத்தில் இரவு நேரக்காவலைப் பலப்படுத்தும் விதமாக தனக்கு உதவிகள் பல புரிந்த மாமனான அபய என்பவனை நகரக் குத்திக என்ற பதவிக்கு அமர்த்தியதோடு தன் மனைவியான சுவர்ணபாலியின் தந்தையான கிரிகண்ட சிவனை கிரிகண்ட பகுதிக்கு தலைவனாக நியமித்தான். இவ்வாறு அதிகாரங்களைப் பரவலாக்கியமையால் நகர நிர்வாகம் சிறப்பாக அமைந்ததால் மக்கள் விருப்பத்தோடு இங்கு குடியேறலாயினர்.

- பண்டுகாபயன் தனது ஆட்சியாண்டின் பத்தாவது ஆண்டில் கிராமங்களுக்கு எல்லைகள் வகுத்தான். இதன் பின்னர் நிர்வாகத்தை மேலும் ஒழுங்கு படுத்திய பண்டுகாபயன் தனக்கும், தன் தாய்க்கும் உதவிகள் பல புரிந்த சித்தராஜ, காலவேல ஆகிய இயக்கர்களை நகரின் வெவ்வேறு பகுதிகளுக்கு காவலுக்கு அமர்த்தினான். நகருக்கு அருகாமையில் துணை நகர்கள் நன்றாக நிறுவியதுடன் அநுராதபுர நகரை நிர்மாணிப்பதில் கூடிய கவனம் செலுத்தினான்.

- அதாவது அநுராதபுர நகர் சுத்திகரிப்பிற்காக நகர சுத்திகரிப்பாளர் பலரை அமர்த்தியதுடன் அவர்களுக்கான அமைவிடங்களையும் அமைத்துக் கொடுத்தான். அத்துடன் மயானங்களை அமைத்ததுடன் சண்பாளர்களுக்கு தனியான மாயானங்களை அமைத்தான்.

- இவ்வாறு திட்டமிட்ட ரீதியில் அநுராதபுர நகரை அமைத்ததுடன் அநுராதபுர நகரைச் சுற்றிலும் பாதுகாப்பு மதில்களை அமைத்தான். பாதுகாப்பு அகழிகளை அமைத்ததுடன் நான்கு நுழைவாயில்களையும் அமைத்தான்.

- இவ்வாறெல்லாம் மிகத்திட்டமிட்டு நகரம் அமைக்கப்பட்டதால் இந்நகர் சுமார் 1300 வருடகாலம் நீடித்து இலங்கையின் மிக நீண்டகாலத் தலைநகரம் என்ற பெருமையைப் பெற்றிருந்தது.



தொகுப்பு : திருமதி.த.சதீஸ்கரன் ஆசிரியர், (வரலாறு) (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk